செ.வெ.எண். 61.

நாள்: 28.12.2017.

# பத்திரிக்கைச் செய்தி

பிரதம மந்திரி பசல் பீமா யோஜனா (PMFBY) திட்டம் நீலகிரி மாவட்ட விவசாயிகளின் நலன் கருதி ICICI Lombard காப்பீடு நிறுவனம் மூலம் 2017-2018-ம் ஆண்டு ராபி பருவத்திற்கு (Rabi Season) செயல்படுத்தப்பட உள்ளது.

இத்திட்டத்தில் வங்கி மூலம் பயிர் கடன் பெறும் விவசாயிகள், பயிர் கடன் பெறாத விவசாயிகள் மற்றும் குத்தகை சாகுபடி செய்யும் விவசாயிகள் என அனைவரும் பயன் பெறலாம்.

நீலகிரி மாவட்டத்தில் உருளைக்கிழங்கு, வாழை மற்றும் மரவள்ளி ஆகிய மூன்று பயிர்களுக்கு விவசாயிகள் காப்பீடு செய்யலாம். பீரிமியம் தொகையாக உருளைக்கிழங்கு ரூ.2765/- ஏக்கர், வாழை ரூ.3635/- ஏக்கர், மற்றும் மரவள்ளி ரூ.986/- ஏக்கர் செலுத்த வேண்டும்.

இத்திட்டத்தில் பயிர்கள் புயல், ஆலங்கட்டி மழை, மண் சரிவு, வெள்ளம் மற்றும் வறட்சி போன்ற இயற்கை சீற்றங்களினால் ஏற்படும் பாதிப்பிற்கும், விதைப்பை தவிர்த்தல் / விதைப்பு தோல்வியுறுதல் / பயிரிட அபாய ஏற்பாடுகளுக்கும் காப்பீடு வழங்கப்படும்.

பயிர் கடன் பெறும் விவசாயிகளுக்கு அந்தந்த கடன் வழங்கும் வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலம் பயிர் காப்பீட்டு தொகை பிடித்தம் செய்யப்படும். கடன் பெறாத விவசாயிகள் தங்களின் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் உள்ள வங்கி கணக்கிலும் ICICI Lombard நிறுவனத்திலும் பயிர் காப்பீடு தொகையை செலுத்தலாம்.

இத்திட்டம் தொடர்பான மேலும் விபரங்களை தெரிந்துக் கொள்ள தங்கள் பகுதி வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர், தோட்டக்கலை அலுவலர், உதவி தோட்டக்கலை அலுவலர்கள் மற்றும் ICICI Lombard -ன் இலவச தொலைபேசி எண்: 1800 2701 055 மற்றும் மின்னஞ்சல் pmfbyclaims@icicilombard.com மூலமாகவும் தொடர்பு கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

விவசாயிகளின் நலன் கருதி பிரிமியம் தொகை செலுத்த ஏதுவாக உதகமண்டலம் வட்டாரத்தில் 1 பொது சேவை மையமும், கோத்தகிரி வட்டாரத்தில் 2 பொது சேவை மையங்களும் மற்றும் கூடலூர் வட்டாரத்தில் 10 பொது சேவை மையங்களும் செயல்பட்டு கொண்டிருக்கிறது.

இவ்வரிய சந்தர்ப்பத்தினை நீலகிரி மாவட்டத்திலுள்ள உருளைக்கிழங்கு, வாழை மற்றும் மரவள்ளி சாகுபடி செய்யும் அனைத்து விவசாயிகளும் பயன் அடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பயிர் காப்பீடு செய்ய கடைசி நாள்: 28.02.2018

மாவட்ட ஆட்சித் தலைவர்
உதகமண்டலம்.